**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21 ஆம் நாள் புதன்கிழமை**
**I.A. 2/2025 in O.S. No.44/2020**

பிரகாஷ் ..... மனுதாரர்/4ம் பிரதிவாதி

/ எதிர்/

ராணி .....எதிர்மனுதார்/வாதி

இம்மனுவானது இறுதியாக 20.01.2026 இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.உதயக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. P.செபானா அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

அசல்வழக்கில் மனுதார்/4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்து கொள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டி சிபிசி ஆர்டர் 8 ரூல் 9ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுவுரை சுருக்கம்</u>**

1. இம்மனுதாரர் அசல்வழக்கில் 4ம் பிரதிவாதி. மனுதார் ஏற்கனவே 1ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையை அடாப்ட் செய்திருந்தார். தாவா சொத்து பற்றி முக்கிய விபரங்களையும் ஆவணங்களையும் குறிப்பிடாமல் விடுபட்டு போய்விட்டது. மேற்படி ஆவணங்களும் , தாவா பாதை பொதுபாதை என்பதற்கு புல வரைபடமும், தாவா பாதையில் சரிபாதி பாக உரிமை பற்றிய பட்டாவும் தற்போது தான் மனுதாரருக்கு தெரிய வந்தது.

2. மேற்படி ஆவணங்களையும், தாவா பாதையின் அமைப்பையும் பற்றி கூடுதலான விபரங்கள் சேர்த்து இத்துடன் கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதார்/வாதி தரப்பு சுருக்கம்</u>** :

எதிர்மனுதாரர் இம்மனுவில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர, மற்றவைகள் பெய்யானவையாகும். மனுதாரர்கள் 29.08.2023 அன்று அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டதாகவும், திருத்தப்பட்ட சி.பி.சி.யின் படி எழுத்துப்பூர்வ அறிக்கை தாக்கல் செய்ய 90 நாட்கள் அவகாசம் இருப்பதாகவும்

எதிர்மனுதாரர்/வாதி குறிப்பிடுகிறார். ஏற்கனவே 5 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், தற்போது எழுத்துப்பூர்வமான அறிக்கையை தாக்கல் செய்வது வழக்கை இழுத்தடிக்க மட்டுமே உதவும் என்று எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே, எதிர்மனுதாரர்/வாதியின் முதன்மை விசாரணை முடிந்துவிட்டதாகவும், விசாரணை தொடங்கிய பிறகு மனுதாரர்/4ம் பிரதிவாதி எழுத்துப்பூர்வமான அறிக்கையை தாக்கல் செய்ய அனுமதிக்கக்கூடாது என்றும், பிரதிவாதிகள் இறந்த பாப்பாத்தியிடம் இருந்து சொத்தை வாங்கியவர்கள் அல்ல, அவர்கள் சொத்தை வாங்கியவரின் நிலையில் நிற்பவர்கள், எனவே இந்த வழக்கில் அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. எதிரிகள் தங்கள் கோரிக்கையை ஆதரிக்க எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5). **<u>தீர்வு</u>**

இவ்வழக்கானது செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் பிரதிவாதிகள் ஏற்கனவே தங்களுடைய எதிர்வழக்குரையை 16.11.2021 அன்று தாக்கல் செய்துவிட்ட நிலையில், எழுவினாக்கள் வனையப்பட்டுவிட்டது.

வாதி தரப்பில் முதல் விசாரணை முடித்து நிலுவையில் இருக்கும்போது, உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 வாதி 10(2)ன் கீழ் மனு தாக்கல் செய்து, தரப்பினர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக, வழக்கின் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் முகவரியில் மாற்றமும் மற்றும் பெயரை சேர்க்க சொல்லி, வழக்குரை பத்தி 5 மற்றும் 7ல் வாசகங்களை சேர்க்க சொல்லி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு அனுமதிக்கப்பட்டுவிட்டது, இவ்வழக்கில் வா.சா.1ன் முதல் விசாரணை மட்டும் செய்துவிட்டு குறுக்கு விசாரணை இன்னும் செய்யவில்லை என்பதாலும், தரப்பினர்கள் அவர்கள் தரப்பு வழக்கை வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்பு எடுத்துரைக்க வேண்டும் என்ற பொது விதி இருந்தாலும், வழக்கு விசாரணை தொடங்கிய பிறகு தரப்பினர்கள் தங்களது கூடுதல் வழக்குரை மற்றும் கூடுதல் எதிர் வழக்குரையை தாக்கல் செய்ய முழுமையாக தடைப்பட்டுள்ளார்கள் என்று கூற முடியாது.

வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்யாத நிலையில், இம்மனு

அனுமதிக்கும் பட்சத்தில், கூடுதலாக முதல் விசாரணையில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு வா.சா.1க்கு வாய்ப்புள்ள நிலையில் இம்மனுவை அனுமதிக்கக்கூடாது என எதிர்மனுதாரர் தரப்பில் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல.

இவ்வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பொருண்மையை இறுதியாக தீர்மானிப்பதற்கு இம்மனுவை இவ்வழக்கின் இந்த நிலையில் அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித பாதகமும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. நீதியின் நலன் கருதி மனுவை அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.01.21 16:10:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்
ஆத்தூர்